IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# கல்வெட்டில் காட்சியளிக்கும் இராஜராஜ சோழனின் நீராட்சி

**ஆ.இராஜ்குமார்,** **முனைவர் பா.முத்துச்சாமி**

முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)
தமிழ்த்துறை
பச்சையப்பன் கல்லூரி,
சென்னை-30

உதவிப் பேராசிரியர், (நெறியாளர்)
தமிழ்த்துறை,
பச்சையப்பன் கல்லூரி,
சென்னை-30

**ஆய்வுச்சுருக்கம்**

நீர் மனித வாழ்விற்கும் இயற்கைச் சமநிலைக்கும் இன்றியமையாத வளமாகும். நீரின் முக்கியத்துவத்தை உணர்ந்த இராஜராஜ சோழன், ஏரிகள், குளங்கள், கால்வாய்கள், கிணறுகள் ஆகிய நீர்நிலைகளைப் பராமரித்து வேளாண் வளர்ச்சிக்குத் துணைபுரிந்தார். உய்யக்கொண்டான் கிணற்றுக் கல்வெட்டு மற்றும் அகஸ்தீஸ்வரம் கல்வெட்டு ஆகியவற்றின் வழி, சோழர் கால நீர்மேலாண்மை, உள்ளாட்சி நிர்வாகப் பங்களிப்பு, நீர்தான மரபு மற்றும் நீர்வளப் பாதுகாப்புக் கொள்கைகள் ஆராயப்படுகின்றன. நீரைப் பாதுகாப்பது அரசின் கடமையாகவும் சமூகப் பொறுப்பாகவும் கருதப்பட்டமை இக்கல்வெட்டுகள் மூலம் தெளிவாகிறது. இன்றைய நீர்ப்பற்றாக்குறைச் சூழலில் சோழர் கால நீர்மேலாண்மை மரபு முன்னுதாரணமாகத் திகழ்கிறது.

**திறவுச் சொற்கள்**

இராஜராஜ சோழன், நீர்மேலாண்மை, கல்வெட்டுகள், உய்யக்கொண்டான் கிணறு, நீர்தானம், சோழர் நிர்வாகம்.

**முன்னுரை**

உலக உயிர்களின் வாழ்வாதாரமாகவும், இயற்கைச் சூழலின் சமநிலையை நிலைநிறுத்தும் அடிப்படை வளமாகவும் நீர் விளங்குகிறது. அறிவியல் ஆய்வுகளின்படி, பூமியின் உருவாக்கக் காலத்திலேயே நீர் தோன்றியது. சுமார் 4.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு மிகுந்த வெப்பத்துடன் இருந்த பூமி, காலப்போக்கில் குளிர்ச்சியடைந்தபோது அதன் உட்பகுதியிலிருந்து வெளிப்பட்ட நீராவி வளிமண்டலத்தில் மேகங்களாகத் திரண்டு, பின்னர் மழையாகப் பொழிந்து கடல், ஆறு, ஏரி போன்ற நீர்நிலைகளை உருவாக்கியது. மேலும், நீர்ப்பனியைக் கொண்ட விண்கற்களும் வால் நட்சத்திரங்களும் பூமியில் மோதியதன் மூலமும் நீரின் ஒரு பகுதி தோன்றியிருக்கலாம் என அறிவியலாளர்கள் கருதுகின்றனர். இவ்வாறு தோன்றிய நீர் ஆவியாதல், மேகமாதல், மழைப்பொழிவு ஆகிய இயற்கை நிகழ்வுகளின் வழியாக நீர்ச் சுழற்சியில் தொடர்ந்து இயங்கி வருகிறது.

**பஞ்சபூதங்களில் நீரின் இடம்**

இந்தியத் தத்துவ மரபிலும் தமிழர் சிந்தனையிலும் உலகம் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் பஞ்சபூதங்களால் ஆனது எனக் கருதப்படுகிறது. இவற்றுள் உயிர்களின் வாழ்விற்கும் இயற்கையின் நிலைத்தன்மைக்கும் நேரடியாக ஆதாரமாக இருப்பது நீராகும். நிலம் உயிர்கள் வாழும் தளத்தை வழங்கினாலும், அந்த நிலத்தை வளப்படுத்தி உயிர்ப்பூட்டுவது நீரேயாகும். தாவர வளர்ச்சி, உணவு உற்பத்தி, உயிரினங்களின் வாழ்வு ஆகிய அனைத்தும் நீரை அடிப்படையாகக் கொண்டுள்ளன. இதனால் பஞ்சபூதங்களுள் உயிர் தாங்கும் பேராற்றல் மிக்க கூறாக நீர் போற்றப்படுகிறது.

**தமிழ் இலக்கியங்களில் நீரின் பெருமை**

நீரின் இன்றியமையாமையைத் தமிழ் இலக்கியங்கள் பல்வேறு கோணங்களில் எடுத்துரைக்கின்றன. குறிப்பாகத் திருவள்ளுவர்,

**“நீரின்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும்**
**வானின்று அமையாது ஒழுக்கு”** [1]

**“நீரகம் பொருந்திய ஊரகத் திரு”**[2]

என்று கூறுவதன்வழி உலக வாழ்வின் அடிப்படை நீரே என்பதை வலியுறுத்துகிறார். மேலும், நீர் தூய்மை, வளம், கருணை, உயிர்ப்பு ஆகிய பண்புகளின் அடையாளமாகவும் கருதப்படுகிறது.

ஆறுகள், குளங்கள், ஏரிகள் போன்ற நீர்நிலைகள் மனித நாகரிகங்களின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் அடித்தளமாக அமைந்துள்ளன. எனவே, நீர் வெறும் இயற்கை வளமாக அல்லாமல்,

உயிர்களைப் பேணிப் பாதுகாக்கும் உயிராதாரச் சக்தியாகவும், உலகின் நிலைத்தன்மையை உறுதிப்படுத்தும் பேரருள்கொடையாகவும் விளங்குகிறது.

**வையை உடைந்த மடைஅடைத்தக் கண்ணும்**[3]

**அறுகுளம் நிறைக்குந போலே, அல்கலும்** [4]

**ஊர் உண் கேணி உண்துறைத் தொக்க** [5]

எனும் அடிகள் உணர்த்துகின்றன. சங்க கால மக்கள் மடை, கால்வாய், குளம், கேணி உள்ளிட்டவை மூலம் நீரினைச் சேமித்து வந்துள்ளனர் என்பதை இவ்வடிகள் வெளிப்படுத்துகின்றன.

இத்தகைய நீரின் இன்றியமையாமையை உணர்ந்த தமிழர் அரசர்களுள் முதன்மையானவர் இராஜராஜ சோழன் ஆவார். கி.பி. 985 முதல் 1014 வரை ஆட்சி புரிந்த அவர், பேரரசை விரிவுபடுத்திய போர்த்திறனாலும், கட்டடக் கலையாலும் மட்டுமன்றி, நீர்மேலாண்மையில் வெளிப்படுத்திய தொலைநோக்குச் சிந்தனையாலும் சிறப்புப் பெற்றார். வேளாண்மையே நாட்டின் பொருளாதார அடித்தளம் என்பதை உணர்ந்த அவர், நீர்வளங்களைப் பாதுகாக்கவும் பாசன வசதிகளை மேம்படுத்தவும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

**நீர்மேலாண்மையில் இராஜராஜ சோழன்**

இராஜராஜ சோழனின் ஆட்சிக்காலத்தில் ஏரிகள், குளங்கள், கால்வாய்கள் போன்ற நீர்நிலைகள் முறையாகப் பராமரிக்கப்பட்டன. ஏரிகளின் கரைகள் பலப்படுத்தப்பட்டு, உடைப்புகள் சரிசெய்யப்பட்டதுடன், வண்டல் மண் அகற்றப்பட்டு நீர்த்தேக்கத் திறன் அதிகரிக்கப்பட்டது. இதன் மூலம் மழைக்காலத்தில் சேமிக்கப்பட்ட நீரை ஆண்டு முழுவதும் வேளாண்மைக்குப் பயன்படும் வகையில் திட்டமிடப்பட்டது.

**“ஊர்க்கால் நிவந்த பொதும்பருள் நீர்”**[6]

எனும் அடியின்மூலம் அறியலாம். மேலும், காவிரி ஆற்றிலிருந்து நீரைப் பிரித்து விவசாய நிலங்களுக்கு வழங்கும் உய்யக்கொண்டான் கால்வாய் போன்ற பாசனத் திட்டங்களும் அவரது ஆட்சியில் முக்கியத்துவம் பெற்றன.

**நீர்வளப் பாதுகாப்பு குறித்த அரசுக் கொள்கைகள்**

சோழர் கால நீர்மேலாண்மையின் மற்றொரு சிறப்பம்சம் உள்ளாட்சி நிர்வாகத்தின் பங்களிப்பாகும். ஏரிகளைப் பராமரிப்பதற்காக “ஏரி வாரியம்” போன்ற சிறப்பு அமைப்புகள் செயல்பட்டன. நீர் பகிர்வு, கரைப் பாதுகாப்பு, நீர்நிலைகளின் பராமரிப்பு போன்ற பணிகளை இவ்வமைப்புகள் கவனித்தன. உள்ளூர் சபைகள் மற்றும் ஊர் நிர்வாகங்கள் நீர்வளப் பாதுகாப்பில் நேரடியாகப் பங்காற்றியமை, அக்கால நிர்வாகத் திறனை

வெளிப்படுத்துகிறது. இராஜராஜ சோழனின் கல்வெட்டுகள் நீர்மேலாண்மை தொடர்பான பல அரிய செய்திகளைப் பதிவு செய்துள்ளன.

ஏரிகளைத் தூர்வாருதல், மதகுகள் அமைத்தல், நீர்நிலைகளைப் பராமரித்தல் போன்ற பணிகளுக்காக வழங்கப்பட்ட நிவந்தங்கள், நிலக்கொடைகள் மற்றும் நிதி உதவிகள் பற்றியதை

**அற்றையும் பொறையும் மணந்த தலைய**
**எண்ணான் திங்கள் அணைய கொடுங்கரை**
**தெண்ணீர்ச் சிறுகுளம் சீள்வது மாதோ**[7]

என்ற அடிகள் மூலம் நீரின் போக்கையும் நிலத்தின் தன்மையும் அறிந்து நம்முன்னோர்கள் நீர்த்தேக்கங்களை ஏற்படுத்தியுள்ளனர். இதன் மூலம் நீர்மேலாண்மை என்பது சோழர் காலத்தில் திட்டமிட்ட அரசுக் கொள்கையாக இருந்தது என்பதை அறிய முடிகிறது.

**உய்யக்கொண்டான் கிணற்றுக் கல்வெட்டு கூறும் நீர்மேலாண்மை**

சோழர் காலத் தமிழர் நாகரிகம் நீர்வள மேலாண்மையில் உலகளவில் சிறப்பிடம் பெற்றதாகும். அவற்றுள் கிணறுகள், ஏரிகள், கால்வாய்கள் போன்ற நீர்நிலைகள் வெறும் இயற்கை அமைப்புகளாக இல்லாமல் திட்டமிட்ட நிர்வாகக் கட்டமைப்பின் அடிப்படையில் பராமரிக்கப்பட்டன. இச்சிறப்பை வெளிப்படுத்தும் அரிய சான்றாக ஆவூர்க் கூற்றத்தைச் சார்ந்த உய்யக்கொண்டான் கிணற்றுக் கல்வெட்டு விளங்குகிறது. இக்கல்வெட்டு,

**"உடையார் ஸ்ரீ ராஜ ராஜ தேவர் பணிமகன் சோழ மண்டலத்து தன்கர நாட்டு நித்த வினோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்து ஆவூருடையான் கண்ணனாரூரன், இவனே ஸ்ரீ ராஜ ராஜ கிணற்றில்த் தொட்டிக்கு நீரிறைப்பதற்க்கு அருண் மொழி தேவன் மரக்காலால் நிசதம் நெல் (ஜுங) ஆகத் திங்கள் (ச) க்கு நெல் (ஜ ங ய) களமும் ஸ்ரீ ராஜ ராஜன் தண்ணீரட்டுவார்க்கு நிசதம் நெல் (ஜ உங) ஆக திங்கள் (ச) க்கு நெல்லு (ஙய) களம் இப் பந்தலுக்கு குசக் கலம் இடுவார்க்கு திங்கள் (க) க்கு நெல்லு (வத) ஆக திங்கள் (ச) க்கு நெல்லு (சகள) மும் ஸ்ரீ ராஜ ராஜன் கிணற்றுக்கு தட்டிக்கும் சத்தத்துக்கும் ஆண்டாண்டு தோறும் ஒதுக்குப் புறமாக வச்ச நெல்லு (உ) கள (வத) ஆக, (ஜ ச ய ச) (கள)வத இந்நெல்லுக்கு இவன் பக்கல் இவ்வூர் ஸபையம் இற திரவியமும் கிரய திரவியமும் கொண்டு இறை இழிய்ச்சி."**[8] என்கிறது. இங்கு அடைப்புக் குறிக்குள் உள்ளவை அனைத்தும் தமிழ் எண்கள் எனக் கருதலாம்.

இக்கல்வெட்டின் பொருளாவது,

**"உடையார் ஸ்ரீ ராஜ ராஜ தேவர் பணிமகன் சோழ மண்டலத்து தன்கர நாட்டு நித்த வினோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்து ஆவூருடையான் கண்ணனாரூரன்**[9] என்று தொடங்கி, இராஜராஜ சோழனின் ஆட்சிக்காலத்தில் இருந்த உள்ளாட்சி நிர்வாக அமைப்பையும், அதனுடன் தொடர்புடைய நீர்மேலாண்மைச் செயல்பாடுகளையும் பதிவு செய்கிறது. இவ்வாசகம், ஆவூர்க் கூற்றத்தைச் சேர்ந்த அதிகாரியான கண்ணனாரூரன்

என்பவன் அரசின் பணியாளராக இருந்ததை உணர்த்துகிறது. இக்கல்வெட்டின் முக்கியச் செய்தியாகக் கிணற்றிலிருந்து தொட்டிக்கு நீர் ஏற்றும் பணியும், அதனுடன் தொடர்புடைய ஊதிய அமைப்பும் குறிப்பிடப்படுகின்றன.

**“இவனே ஸ்ரீ ராஜ ராஜ கிணற்றில்த் தொட்டிக்கு நீரிறைப்பதற்கு அருண்மொழி தேவன் மரக்காலால் நிசதம் நெல்…”**[10] என்ற பகுதி, இராஜராஜ கிணற்றிலிருந்து தொட்டிக்கு நீர் உயர்த்தும் பணிக்காகக் குறிப்பிட்ட அளவு நெல் ஊதியமாக வழங்கப்பட்டதை வெளிப்படுத்துகிறது. இது சோழர் காலத்தில் நீர்மேலாண்மை பணிகள் ஊதிய அடிப்படையில் திட்டமிடப்பட்டிருந்ததைத் தெளிவுபடுத்துகிறது. மேலும், **“ஸ்ரீ ராஜராஜன் தண்ணீரட்டுவார்க்கு நிசதம் நெல்”**[11] என்ற வாசகம், நீரை மக்களுக்கு அல்லது பாசன நிலங்களுக்கு வழங்கும் பணியாளர்களுக்கும் நிரந்தர ஊதியம் வழங்கப்பட்டதைக் காட்டுகிறது. அதேபோல், **“இப் பந்தலுக்கு குசக் கலம் இடுவார்க்கு…”**[12]என்ற குறிப்பு, கிணறு சார்ந்த கட்டமைப்புகளின் பராமரிப்புப் பணிகளுக்கும் நெல் அளிக்கப்பட்டதை உணர்த்துகிறது. கல்வெட்டில் மேலும்,

**“ஸ்ரீ ராஜ ராஜன் கிணற்றுக்குத் தட்டிக்கும் சத்தத்துக்கும் ஆண்டாண்டு தோறும்…”**[13] என்ற பகுதி மிகவும் முக்கியமானதாகும். இதில் கிணற்றின் நீர் உயர்த்தும் கருவிகள், தட்டிகள் மற்றும் பிற இயந்திரப் பகுதிகளின் பராமரிப்பிற்காக ஆண்டுதோறும் நிரந்தர நெல் ஒதுக்கப்பட்டிருந்தது குறிப்பிடப்படுகிறது. இதன் மூலம் நீர்மேலாண்மை என்பது ஒருநாள் நடவடிக்கையாக இல்லாமல் தொடர்ச்சியான நிர்வாக அமைப்பாக இருந்தது தெளிவாகிறது. இவ்வமைப்பின் அனைத்து செலவுகளும், **“இவ்வூர் ஸபையும் இறை திரவியமும் கிரய திரவியமும் கொண்டு…”**[14] என்ற வாசகத்தின் மூலம் ஊர்ச் சபை மற்றும் வருவாய் நிர்வாகத்தின் மூலம் நிர்வகிக்கப்பட்டது என்பதும் விளங்குகிறது. இதனால், நீர்நிலைகள் நிர்வாகத்தில் உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்பு முக்கியமானதாக இருந்தது என்னும் செய்தி தெரிய வருகிறது.

இக்கல்வெட்டுச் செய்தி முழுமையாகப் பார்க்கும்போது, சோழர் கால நீர்மேலாண்மை ஒரு திட்டமிட்ட, நிரந்தர, மக்கள் பங்கேற்புடன் கூடிய நிர்வாக அமைப்பாக இருந்தது தெளிவாகிறது. கிணறு, தொட்டி, நீரிறைப்பு கருவிகள், பணியாளர்கள், ஊதியம் ஆகிய அனைத்தும் ஒருங்கிணைந்த அமைப்பாகச் செயல்பட்டன. நீர் வெறும் இயற்கை வளமாக இல்லாமல் சமூகப் பொருளாதார வாழ்வின் அடிப்படைக் கூறாகக் கருதப்பட்டதையும் இக்கல்வெட்டு உணர்த்துகிறது. எனவே, உய்யக்கொண்டான் கிணற்றுக் கல்வெட்டு, தமிழர் நீர்வள மேலாண்மையின் அறிவுச்செறிந்த மரபையும், சோழர் கால நிர்வாகத் திறனையும் வெளிப்படுத்தும் ஓர் அரிய வரலாற்றுச் சான்றாக நிலைத்து நிற்கிறது.

கன்னியாகுமரி அருகிலுள்ள அகஸ்தீஸ்வரம் கோயில் கல்வெட்டில், சோழர் கால நீர்தான மரபும் அரசரின் புகழ்பெயர் பயன்பாடும் தெளிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுக் குறிப்பிடும் செய்தி, தண்ணீர் பந்தல் ஒன்று அரசரின் பெயரால் அழைக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டது என்பதாகும்.

இக்கல்வெட்டில் முதலாம் ராஜராஜ சோழனின் பெருமையைச் சுட்டும் வகையில், "ஜெயங்கொண்ட சோழன்" என்ற பட்டப்பெயர் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்தப் பெயர் அரசரின் வெற்றிகளையும், பேரரசு விரிவாக்கத்தையும் குறிக்கும் அரசியல் பட்டமாகும்.

கோவிலுடன் இணைந்த தண்ணீர் பந்தல் அமைக்கப்பட்டது. அந்த தண்ணீர் பந்தல் "ஜெயங்கொண்ட சோழன்" பெயரால் அழைக்கப்பட்டது. அதன் பராமரிப்பிற்காக நிலங்கள் அல்லது வருவாய் ஒதுக்கப்பட்டது. பொதுமக்கள், யாத்திரிகர்கள் மற்றும் பக்தர்களுக்குத் தண்ணீர் வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

**வரலாற்றுச் சிறப்பு**

இந்தக் கல்வெட்டு மூன்று முக்கிய உண்மைகளை வெளிப்படுத்துகிறது.

1. **அரசர் பெயரில் சமூக சேவை அமைப்புகள்**

சோழர் காலத்தில் நீர்தானம் போன்ற பொதுநலச் செயல்கள் அரசரின் பெயரால் நிறுவப்பட்டன. இஃது அரச அதிகாரத்தையும் அறச்செயலையும் இணைக்கும் மரபாகும். மழைநீரைச் சேமித்து வைப்பதற்கு ஏற்ற நீர்நிலைகளை அமைப்பது ஒருமன்னனின் தலையாயக் கடமைகளுள் ஒன்று என்பதனைப் புறநானூறு உணர்த்துகிறது.

**அடுபோர்ச் செழிய இகழாது வல்லே**
**நிலன்நெளி மருங்கில் நீர்நிலை பெருக**[15]

2. **கோவில் – நீர்மேலாண்மை இணைப்பு**

கோவில்கள் வெறும் வழிபாட்டு இடங்களாக இல்லாமல், தண்ணீர்ப் பந்தல் போன்ற சமூக நல மையங்களாகவும் செயல்பட்டன.

3. **"ஜெயங்கொண்ட சோழன்" என்ற அரசியல் பெருமை**

"ஜெயங்கொண்ட சோழன்" என்னும் பட்டம் ராஜராஜ சோழனின் வெற்றிப் பெருமையையும், தென்னிந்தியாவில் அவர் உருவாக்கிய பேரரசு அதிகாரத்தையும் குறிக்கிறது.

**நிறைவுரை**

உய்யக்கொண்டான் கல்வெட்டு கூறும் செய்திகள், இராஜராஜ சோழனின் ஆட்சிச் சிறப்பை மட்டும் பறைசாற்றாமல், நீர்வளப் பாதுகாப்பு, மக்கள் பங்கேற்பு, உள்ளாட்சி நிர்வாகம், நிலையான வள மேலாண்மை ஆகியவற்றில் தமிழர் பெற்றிருந்த உயரிய அறிவை வெளிப்படுத்துகின்றன. அகஸ்தீஸ்வரம் கல்வெட்டு பதிவு செய்யும் தண்ணீர்ப் பந்தல் மரபு, நீர்தானத்தை அறச்செயலாக மட்டுமன்றிச் சமூகப் பொறுப்பாகவும் அரசின் கடமையாகவும் கருதிய தமிழர் சிந்தனையை எடுத்துரைக்கிறது. ஒரு பானை சோற்றுக்குச் சில சோறு பதம் என்னும் முதுமொழிக்கு ஏற்ப இங்கு இராஜராஜசோழனின் நீர்மேலாண்மைக்கு இரு கல்வெட்டுச் செய்திகள் சான்று பகர்கின்றன. இன்றைய நீர்ப்பற்றாக்குறை, சுற்றுச்சூழல் சவால்கள் நிறைந்த காலகட்டத்தில், சோழர் கால நீர்மேலாண்மை மரபு வரலாற்றுப் பாடமாக மட்டுமன்றி எதிர்காலத்திற்கான வழிகாட்டும் கலங்கரை விளக்காகவும் திகழ்கிறது.

**சான்றெண் விளக்கம்**


1. திருக்குறள் – 20,
2. கொன்றை வேந்தன், பா.51,
3. பரிபாடல், பா.6:82,
4. அகநானூறு,பா. 12,
5. குறுந்தொகை, பா.399
6. கலித்தொகை, பா.56,
7. புறநானூறு,பா.118,
8. உய்யகொண்டான் திருமலை உஜ்ஜேவநாதர் திருக்கோயில், கிணற்றுக் கல்வெட்டு,
9. மேலது,
10. மேலது,
11. மேலது,
12. மேலது,
13. மேலது,
14. மேலது,
15. புறநானூறு,பா.18

**துணைநூற்பட்டியல்**


1. வரதராசனார்.மு, திருக்குறள் தெளிவுரை, திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட்., சென்னை – 18.
2. பரிபாடல், திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட்., சென்னை – 18, 1990.
3. அகநானூறு, திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட்., சென்னை – 18, 1994.
4. குறுந்தொகை, திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட்., சென்னை – 18,1993.
5. புறநானூறு, திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிட்., சென்னை – 18,1990
6. கொன்றைவேந்தன், கௌரா பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை-2021
7. பிரணவ் ஆய்வு இதழ்